# சாதாரணக் கூட்டம்

**அன்புடையீர்**

வணக்கம். பல்லடம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் வருகிற 30.12.2024 திங்கள்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் நகர்மன்ற தலைவர் திருமதி.கவிதாமணி ராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட பொருட்களை பரிசீலித்து நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. அவ்வமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பொருள் :01

பல்லடம் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரது நவம்பர் 2024 மாதத்தின் நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1065/2020/சி1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :02

பல்லடம் நகராட்சியானது அரசாணை (நிலை) எண் 154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி5) நாள்:09.08.2010 மூலம் மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது அருகிலுள்ள ஆறுமுத்தாம்பாளையம், மாணிக்காபுரம் மற்றும் வடுகபாளையம்புதூர் ஆகிய மூன்று கிராம ஊராட்சிகள் பல்லடம் நகராட்சியுடன் இணைய உள்ளது. இதனால் பல்லடம் நகராட்சியின் மக்கள் தொகை மற்றும் வருவாய் அதிகரிக்கும். இதனை கருத்தில் கொண்டு பல்லடம் நகராட்சியை முதல் நிலையிலிருந்து தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தினால் , பல்லடம் நகராட்சிக்கு பல்வேறு திட்டப்பணிகள் வர ஏதுவாக இருக்கும். எனவே, **பல்லடம் நகராட்சியை தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த** அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 03

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக் குத்தகை இனம் அண்ணா பேருந்து நிலைய பேருந்து நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஏலம் எடுக்கப்படாததால் வருவாய் இழப்பு ஏற்படவண்ணம் நகர்மன்ற தீர்மான எண் 315 நாள்.29.11.2024–ன் படி அனுமதி பெறப்பட்டு தினக்கூலி அடிப்படையில் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது அண்ணா பேருந்து நிலைய அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் வரப்படும் வாகனங்களுக்கு கட்டண வசூலிக்கும் உரிமம் ஏலம் எடுக்கப்படாததால் அலுவலக பணியாளக்கள் மூலம் துறை வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காண் இரண்டு குத்தகை இனம் ஏலம் போகும் வரையில் வசூல் பணி மேற்கொள்ள 3 பணியாளர்களை வெளிமுகமை மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களின் உத்தரவில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் ஓராண்டுக்கு மூலமாக பணியாளர்களை நியமனம் செய்யவும் அதற்கான ஊதிய உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகறது. (ந.க.எண்.1665/2023/அ2)

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 04

பல்லடம் நகராட்சி பேருந்து நிலையம் அருகில் இயங்கி வந்த தினசரி மார்கெட் கடைகள் மிகவும் பழுதடைந்ததால், 62 கடைகளையும் இடித்துவிட்டு புதியதாக 48 கடைகள் மூலதன நிதியில் (CGF) கட்டப்பட்டுள்ளது. மேற்படி, இடிக்கப்பட்ட 62 கடைகளின் குத்தகைதார்களின் வாழ்வாதாரம் கருத்தில் கொண்டு நகர்மன்ற தீர்மான எண்.126/2023, நாள்:30.05.2023–ன் படி அருகில், உள்ள தினசரி மார்கெட் கடைகளில் ஏலம் போகாத காலியாக உள்ள கடைகள் மற்றும் வாரச்சந்தை வணிக வளாகத்தில் தற்காலிகமாக கடைகள் வைத்துக் கொள்ளவும், மேற்படி தற்காலிகமாக அமைந்துக்கொள்ள விருப்பம் தெரிவித்த கடைகாரர்களுக்கு வாடகை தொகை நிர்ணயம் செய்து வசூல் செய்யவும் மன்றம்

அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே தினசரி மார்கெட்டில் பழுதடைந்த கடைகள் இடிக்கப்பட்ட இடத்தில் தற்போது புதியதாக 48 கடைகள் கட்டப்பட்டு ஏலம் விடப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதால், ஏற்கனவே காலியாக இருந்த கடைகளை குத்தகைதாரர்களுக்கு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளை மீண்டும் பொது ஏலத்தில் கொண்வந்து, ஏலம் கோரும் குத்தகைதாரர்களுக்கு ஒப்படைத்திட பொதுஏலம்/ ஒப்பந்தப்புள் கோர நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1422/2014/அ2)

**அலுவலக குறிப்பு:-**

அ) நகராட்சியின் வருவாய் நிதியினை உயர்த்திட மன்றம் அனுமதியளிக்கலாம்.

ஆ) மேற்படி ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையை தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யுவும் அதற்கான செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 05

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான வாரச் சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடத்தின் மேற்கூரை இடிந்து விழும் நிலையில் உள்ளதால் நகர்மன்ற தீர்மான எண். 279 நாள்.25.10.2024-ல் வாரச்சந்தை கட்டண கழிப்பிடத்தை இடித்து அப்புறபடுத்த அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி கட்டண கழிப்பிடத்தை திருமதி.ஆனந்தி என்பவர்க்கு 01.04.2024 முதல் 31.03.2025 வரையில் (ஓராண்டுக்கு) ரூ.1,00,300/-க்கு ஆண்டுக் குத்தகை விடப்பட்டுள்ளது. எனவே 01.01.2025 முதல் நகராட்சி குத்தகை இனத்தில் இருந்து மேற்படி குத்தகையை ரத்து செய்து குத்தகை சொத்தாக்கத்திலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1859/2024/அ2)

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 06

அரசாணை எண்.118. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.09.2014-ல் தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 360 இடங்களில் அம்மா உணவகங்கள் திறப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையம் அருகில் ஒரு அம்மா உணவக கட்டிடம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் மளிகை பொருட்கள், காய்கறிகள், ஆவின் தயிர், அரிசி மற்றும் அம்மா உணவக பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவைகளுக்கு மேற்கொள்ளப்படும் செலவினத்திற்கு 2021-22-ம் ஆண்டு வரையில் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. மேலும், 2022-23 முதல் 2024-25 வரையிலான காலத்திற்கு செலவினம் மேற்கொள்ள கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வருடம் | தோராய செலவினத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2022 - 2023 | ரூ.40.00 இலட்சம் |
| 2. | 2023 - 2024 | ரூ.40.00 இலட்சம் |
| 3. | 2024 - 2025 | ரூ.45.00 இலட்சம் |

**அலுவலக குறிப்பு :-**

1. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2022-23 முதல் 2023-24 வரையில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.826/2015/அ1)

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 07

அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.23.01.2023ல் பல்லடம் நகராட்சி முதல் நிலை நகராட்சியாக இருப்பதால் அதன் நிலைக்கேற்ப பொதுப்பிரிவில் இரண்டு தட்டச்சர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. அரசாணையின்படி மேற்கண்ட இரண்டு தட்டச்சர் பணியிடங்கள் இதுவரைக்கும் நிரப்பப்படாமல் காலியாக உள்ளதால், மன்றத்தின் அனுமதி பெற்று

இந்நகராட்சிக்கு ஒப்பந்த அடிப்படையில் கணினி பணியாளர்கள் இரண்டு நபர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்தரவில் நிர்ணயம் செய்துள்ள ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் Outsourcing மூலம் 01.01.2024 முதல் 31.12.2024 வரை ஓராண்டிற்கு பணிபுரிய அனுமதி பெறப்பட்டுள்ள அனுமதி காலம் 31.12.2024–ல் முடிவடைவதால் தொடர்ந்து 01.01.2025 முதல் ஓராண்டிற்கு காலநீட்டிப்பு செய்து பணியமர்த்திக் கொள்ளவும், அதற்கான ஊதிய உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.464/2024/சி1)

**அலுவலக குறிப்பு :–**

நிர்வாக நலன் மற்றும் அவசர அவசியம் கருதி காலநீட்டிப்பு செய்துக் கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 08

பல்லடம் நகராட்சியின் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்:04.12.2024–ன் படி நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 12.12.2024–ஆம் தேதியன்று நடைபெற்ற பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில், பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை மேலும் வரிசை எண்:12 மற்றும் 13–க்கு மட்டும் வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் பங்கு பெற்றனர். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் கலந்து கொண்டவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடைகள் மற்றும் குத்தகை இனங்கள் விவரம் | ஒப்பந்தம் அள்ளித்தவரின் பெயர்விவரம் | ஒப்பந்த தொகை விவரம் (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|---|
| 1) | மாணிக்காபுரம் ரோடு மாட்டிறைச்சி கடை–1 உரிமம் | S.முருகசாமி<br>9A2–ஜே கே ஜே காலனி,<br>மாணிக்காபுரம் ரோடு,<br>பல்லடம். 9942345856 | ரூ. 4,06,500/– |
| | | இளங்கோவன்<br>25/1 மாணிக்காபுரம் ரோடு,<br>பல்லடம். 9566918886 | ரூ. 4,00,000/– |
| 2) | மாணிக்காபுரம் ரோடு மாட்டிறைச்சி கடை–2 உரிமம் | C.அய்யாவு<br>12E6–ஜே கே ஜே காலனி,<br>மாணிக்காபுரம் ரோடு,<br>பல்லடம். 9944712804 | ரூ. 4,06,500/– |
| | | M.சுரேஷ்<br>115 L–ஜே கே ஜே காலனி,<br>மாணிக்காபுரம் ரோடு,<br>பல்லடம். 8667328903 | ரூ. 4,00,000/– |

அ) மேற்படி குத்தகைஇனம் வரிசைஎண்:1–ல் உள்ள மாணிக்காபுரம் ரோடு மாட்டிறைச்சி கடை–1 உரிமத்திற்கு திருS. முருகசாமி என்பவர் திரு.இளங்கோவன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை விட அதிகபட்ச தொகை ரூபாய்.4,06,500/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே, அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு,S. முருகசாமி என்பவருக்கு குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமத்தினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ) மேற்படி குத்தகை இனம் வரிசை எண்:2–ல்உள்ள மாணிக்காபுரம் ரோடு மாட்டிறைச்சி கடை–2 உரிமத்திற்கு திருC.அய்யாவு என்பவர் திரு.சுரேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியைவிட அதிகபட்ச தொகை ரூபாய்4,06,500/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே, அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.C.அய்யாவு என்பவருக்கு குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமத்தினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.464/2024/சி1)

**அலுவலக குறிப்பு :**

1.அதிகபட்ச தொகை ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களுக்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேலும் ஏலம் போகாத கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனத்திற்கும் மீண்டும் குறுகிய கால மறு பொது ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் : 09

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் மின்விளக்குகள் பழுதடைந்தும், கட்டிடத்தில் ஆங்காங்கே பூச்சுகள் பழுதடைந்துள்ளதும் உள்ளது. மேலும் வர்ணம் பூசவும், வேறு சில பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பழுதுகளை சரிசெய்யவும், வர்ணம் பூசவும், புதியதாக மின்விளக்குகள் பொருத்துதல் போன்ற பணிகளை ரூ.4.50 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3105/2024/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் : 10

பல்லடம் நகராட்சி வார்டு எண்:14 மேற்கு பல்லடம் பகுதியில் உள்ள 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள 0.75 இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் ஒரு நீர்மூழ்கி மின்மோட்டார் மட்டுமே இயங்கி வருகின்றது. இது அவ்வப்போது பழுது ஏற்படுகிறது. பழுது ஏற்படும் சமயங்களில் மாற்று மின்மோட்டார் இல்லாத காரணத்தால் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. எனவே, சீரான குடிநீர் விநியோகம் செய்ய மாற்று மின்மோட்டார் (Stand by Motor) ஒன்று பொருத்த வேண்டியது அத்தியாவசியமாகும். இப்பணியை ரூ.1.40 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3106/2024/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் : 11

பல்லடம் நகராட்சி வார்டு எண்:17 ஸ்ரீ நகர் வடுகபாளையம் பகுதியில் உள்ள 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் குடிநீர் பணியாளர்களுக்கு ஷெட் அமைத்தல், நுழைவு வாயிலில் பெயர் பலகை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் ஆகிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இப்பணிகளை ரூ.2.30 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது(ந.க.எண்: 3107/2024/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் : 12

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 கல்லம்பாளையம் பகுதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, கல்லம்பாளையம் பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.3.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3108 /2024/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

பொருள் : 13

பல்லடம் நகராட்சி வார்டு எண்:02 சேடபாளையம் பகுதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, சேடபாளையம் பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.3.20 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3109/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 14</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:03 தெற்குபாளையம் பகுதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, நாரணாபுரம் பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் கற்கள் பதித்தல் போன்ற பணிகளை ரூ.3.50 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3110/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 15</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:04 எஸ்.ஏ.பி. நகர் பகுதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது.எனவே, எஸ்.ஏ.பி. நகர் பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.3.10 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது(ந.க.எண்: 3111/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 16</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:06 இராயர்பாளையம் நடுப்புதூர் பகுதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, இராயர்பாளையம் நடுப்புதூர் பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் கற்கள் பதித்தல் போன்ற பணிகளை ரூ.2.80 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3112/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 17</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:08 பச்சாபாளையம் பகுதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, பச்சாபாளையம் பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் கற்கள் பதித்தல் போன்ற பணிகளை ரூ.3.20 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3113/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம். **தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 18</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:09 ஏ.ஜே.பி. வீதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, ஏ.ஜே.பி. வீதி பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் கற்கள் பதித்தல் போன்ற பணிகளை ரூ.3.70 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3114/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 19</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:11 மாணிக்காபுரம் ரோடு குட்டை அருகில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, மாணிக்காபுரம் ரோடு பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.3.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3115/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 20</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:12 அண்ணாநகர் பகுதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, அண்ணாநகர் பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் கற்கள் பதித்தல் போன்ற பணிகளை ரூ.4.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3116/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 21</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 14 கொசவம்பாளையம் ரோட்டில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, கொசவம்பாளையம் ரோடு பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல் , ஜி.ஐ ஷீட் அமைத்தல், மற்றும் கிரில் கேட் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.2.80 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3117/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 22</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:14 மேற்கு பல்லடம் குடிநீர் நீர்த்தேக்க தொட்டி அருகில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து

பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, மேற்கு பல்லடம் குடிநீர் நீர்த்தேக்க தொட்டி அருகில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் கற்கள் பதித்தல் போன்ற பணிகளை ரூ.3.70 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3118/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 23</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:16 பனப்பாளையம் பகுதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, பனப்பாளையம் பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.3.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.(ந.க.எண்: 3119/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 24</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:17 ஹாஸ்டல் ரோடு பகுதியில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, ஹாஸ்டல் ரோடு பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.2.90 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3120/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 25</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:18 சித்தம்பலம் சாலையில் உள்ள பொது விநியோக கடையில் தரைத்தளம் முழுவதுமாக பழுதடைந்தும், Sun shade, loft பழுதடைந்து கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளது. மேலும், கடையின் முன்புறம் மேற்கூரை இல்லாததால் கோடை மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் காத்திருந்து பொருட்கள் வாங்க சிரமமாக உள்ளதுடன், கடையின் முன்புறம் கேட் வசதி இல்லாததால் சமூக விரோத செயல்களும் நடைபெறுகிறது. எனவே, சித்தம்பலம் சாலையில் பொது விநியோக கடையில் தரைத்தளம், வர்ணம் பூசுதல், முன்புறம் ஜி.ஐ ஷீட் அமைத்தல், கிரில் கேட் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் கற்கள் பதித்தல் போன்ற பணிகளை ரூ.3.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3121 /2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 26</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:17 வடுகபாளையம் மேற்கு பல்லடம் செல்லும் சாலை வி.எஸ்.வி. நகர் செல்லும் சாலை சந்திப்பு அருகில் உள்ள ஆழ்துளை கிணற்று மோட்டார் மற்றும் பைப்கள் பழுதுபட்டு அறுந்து ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்து விட்டது. இதனால் இந்த ஆழ்துளை கிணற்று நீரை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, புதியதாக நீர்மூழ்கி மின் மோட்டார், யுபிவிசி பைப், கேபிள் மற்றும் பேனல் போர்டு ஆகியவைகள் புதியதாக மாற்ற வேண்டியுள்ளது. இப்பணியை ரூ.2.55 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து

மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3122/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 27</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:04 மங்கலம் சாலை மார்க்கெட்டிங் சொசைட்டி முன்புறம் உள்ள மழைநீர் வடிகாலில் குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் கலந்து கழிவுநீர் தொட்டியில் சேகரமாவதால் அடைப்பு ஏற்படுகிறது. எனவே, கழிவுநீர் தொட்டியில் சேகரமாவதற்கு முன்பு சிறிய அளவில் தொட்டி கட்டி அதில் மழைநீர் வடிகாலில் இருந்து குப்பைகள் கலந்து வரும் வரும் தண்ணீரை பாய்ச்சி சல்லடை மூலம் வடிகட்டி பின்பு கழிவுநீர் தொட்டிக்கு அனுப்புவதன் மூலம் அடைப்பு ஏற்படுவதை தடுக்கலாம். எனவே, மங்கலம் சாலை மார்க்கெட்டிங் சொசைட்டி முன்புறம் Chamber கட்ட ரூ.2.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3123/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 28</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள பொதுமக்களுக்கு தினந்தோறும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு நகராட்சிக்கு சொந்தமான 109 எண்ணிக்கையிலான ஆழ்துளைக்கிணறு மற்றும் 13 எண்ணிக்கையிலான திறந்தவெளி கிணறுகள் மூலம் விநியோகம் செய்வதற்கு நகராட்சியின் பொறியியல் பிரிவில் குடிநீர் சம்பந்தமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் (திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப் பட்டியல்படி) பணியாளர்களை நியமனம் செய்து (Out Sourcing) மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே மேற்கண்ட பணிக்கு வழங்கப்பட்டிருந்த பணி உத்திரவு 31.12.2024 உடன் முடிவடைய உள்ளதால் மேற்கண்ட குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டியுள்ளது. எனவே மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 31.05.2025 வரை ஒப்பந்த அடிப்படையில் Out Sourcing மூலம் பணிகளை ரூ.14.50 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3124/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 29</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள பொதுமக்களுக்கு தினந்தோறும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பெறப்படும் குடிநீர் அண்ணாநகர், CTC காலனி, மேற்கு பல்லடம், வடுகபாளையம்–I, வடுகபாளையம்–II பனப்பாளையம், ராயர்பாளையம், BDO காலனி, SAP நகர், NSP நகர், கல்லம்பளையம், சேடபாளையம், நாரணாபுரம் ஆகிய 13 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யவும், கேட்வால்வு 405 எண்ணிக்கை மற்றும் Sluice Valve 40 எண்ணிக்கை வால்வுகள் ஆகியவற்றை தினசரி பயன்படுத்தி குடிநீரை சீரான முறையில் பிரித்து வழங்குவதற்கும், நகராட்சியின் பொறியியல் பிரிவில் குடிநீர் சம்பந்தமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் (திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப் பட்டியல்படி) பணியாளர்களை நியமனம் செய்து (Out Sourcing) மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே மேற்கண்ட பணிக்கு வழங்கப்பட்டிருந்த பணி உத்திரவு 31.12.2024 உடன் முடிவடைய உள்ளதால் மேற்கண்ட குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டியுள்ளது. எனவே மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 31.05.2025 வரை ஒப்பந்த அடிப்படையில் Out Sourcing மூலம் பணிகளை ரூ.14.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 3125/2024/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :30**

பல்லடம் நகராட்சியில் பொறியியல் பிரிவின் மூலம் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT), 15வது நிதிக் குழு திட்டம், தூய்மை பாரத இந்தியா, மாநிலங்களுக்கான மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவி திட்டம் மற்றும் நகராட்சிப் பொது நிதி போன்ற பல்வேறு விதமான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சியில் பணி ஆய்வாளர் பணியிடம் காலியாக உள்ளதால், மேற்கண்ட பணிப் பொறுப்புகளை உடனருந்து கவனித்துக் கொள்ள யாரும் இல்லை.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் போன்ற அலுவலகங்களுக்கு அடிக்கடி திட்டப் பிரேரணைகள், மதிப்பீடுகள், பணி முடிவு அறிக்கை மற்றும் பணிகள் தொடர்பான விபரங்களை நேரடியாக சென்று சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் அனைத்தையும் மேற்கொள்ளும் போது பணி மேற்பார்வையாளரால் பணிகள் மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்படுவதுடன் பணிகளும் சுணக்கம் ஏற்படுகிறது. எனவே, பல்லடம் நகராட்சியில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் உடனடியாக கால தாமதமின்றி நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இரு தொழில் நுட்ப பணியாளர்களை (தமிழ்நாடு அரசு பொதுபணித்துறை தரப்படுத்தப்பட்ட விலை விகிதப் பட்டியல் படி) கொண்டு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:3126 /2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 31**

பல்லடம் நகராட்சி மங்கலம் சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் நுழைவு வாயிலில் 'கலைஞர் நூற்றாண்டு விழா நினைவு நீர்த்தேக்க தொட்டி வளாகம்' பெயர் பலகை அமைத்தல் மற்றும் குடிநீர் அளவுமானி பொருத்த ரூ.1.00 இலட்சம் செலவில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3122/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 32**

பல்லடம் நகராட்சியில் 1–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. மேற்கு கல்லம்பாளையம் வட்டமலை வீதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைத்துத் தர கோருதல்
2. கல்லம்பாளையம் போயர் வீதியில் தெருவிளக்கு அமைத்துத் தர கோருதல்
3. பொன் அவென்யூ பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்துத் தர கோருதல்
4. மேற்கு கல்லம்பாளையம் முதல் வீரபத்திரன் தோட்டம் வரை மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு பொருத்தி தர கோருதல்
5. கல்லம்பாளையம் நகராட்சி பள்ளியில் கட்டிய கழிப்பிடத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்து தரைத்தள கற்கள் அமைத்து தர கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 33**

பல்லடம் நகராட்சியில் 6–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திருப்பூர் சாலை இராயர்பாளையம் தெற்கு சுமார் 100 மீ நீளத்திற்கு புதியதாக மழைநீர் வடிகால் அமைத்துத் தர கோருதல்
2. கரையாம்புதூர் மயான பகுதிக்கு தெருவிளக்கு அமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**நகர்மன்றத் தலைவர்**
**பல்லடம் நகராட்சி**